Class -X | II Term Worksheet – SA 2 | Subject – Tamil
GSS | | January – 2012

## இலக்கணம்:

### I. சான்று தருக.

1. இயல்புப்புணர்ச்சி
2. விகாரப் புணர்ச்சி
3. திசைப்பெயர்ப் புணர்ச்சி
4. திசைப்பெயரோடு பிறபெயர்களின் புணர்ச்சி
5. பண்புப்பெயர்ப் புணர்ச்சி
6. மகர ஈற்றுப் புணர்ச்சி
7. கார்காலம்
8. குளிர்காலம்
9. முன்பனிக்காலம்
10. பின்பனிக்காலம்
11. இளவேனிற்காலம்
12. முதுவேனிற்காலம்
13. காலை
14. நண்பகல்
15. எற்பாடு
16. மாலை
17. யாமம்
18. வைகறை
19. குறிஞ்சி நிலத்தெய்வம்
20. முல்லை நிலத் தெய்வம்
21. மருத நிலத் தொழில்
22. நெய்தல் நில உணவு
23. பாலை நில மக்கள்
24. குறள் வெண்பா
25. நேரிசை வெண்பா
26. இன்னிசை வெண்பா
27. பஃறொடை வெண்பா
28. நேரிசைச் சிந்தியல் வெண்பா
29. இன்னிசைச் சிந்தியல் வெண்பா
30. நேரிசை வெண்பா
31. இணைக்குறள் ஆசிரியப்பா
32. நிலைமண்டில ஆசிரியப்பா
33. அடிமறிமண்டில ஆசிரியப்பா
34. நேரசை
35. நிரையசை
36. தேமா
37. புளிமா
38. கருவிளம்
39. கூவிளம்
40. தேமாங்காய்
41. புளிமாங்காய்
42. கருவிளங்காய்
43. கூவிளங்காய்
44. கூவிளங்கனி
45. கருவிளங்கனி
46. தேமாங்கனி
47. புளிமாங்கனி
48. ஓரசைச்சீர்
49. ஈரசைச்சீர்
50. மூவசைச்சீர்
51. தற்குறிப்பேற்ற அணி
52. வஞ்சப்புகழ்ச்சி அணி
53. இரட்டுற மொழிதல் அணி
54. செம்மொழிச்சிலேடை அணி
55. பிரிமொழிச்சிலேடை அணி
56. பின்வரு நிலை அணி
57. சொற் பின்வரு நிலை அணி
58. பொருள் பின்வரு நிலை அணி
59. சொற்பொருள் பின்வரு நிலை அணி
60. பிறிது மொழிதல் அணி

### II. கோடிட்ட இடத்தை நிரப்புக.

**புணர்ச்சி**

1. நிலைமொழியின் ஈற்றெழுத்தும் வருமொழியின் முதலெழுத்தும் சேர்வது ____________ ஆகும்.
2. இரு சொற்கள் சேரும்போது எவ்வித மாற்றமும் இன்றி இயல்பாகப் புணர்வது ________
3. இரு சொற்கள் சேரும்போது எவ்வித மாற்றமும் இன்றி இயல்பாகப் புணர்வது ___________
4. திசைப்பெயரோடு திசைப்பெயரும், பிற பெயரும் சேர்ந்து புணர்வது ___________ எனப்படும்.
5. நிறம், சுவை, அளவு, வடிவம் ஆகியன குறித்து வரும் சொற்கள் ________ ஆகும்.
6. செம்மை, சிறுமை, சேய்மை, நன்மை, இளமை, புதுமை போன்ற சொற்களும், இவற்றுற்குரிய எதிர்ச்சொற்களும் _____பண்புப் பெயர்கள் ஆகும்.
7. நிலை மொழியின் மகர ஈறு கெட்டு வருமொழி முதலில் உள்ள வல்லின எழுத்து மிகுந்து புணருவது _______ ஆகும்.
8. செம்மை + மொழி ______ ஆகப் புணரும்.
9. மரவேர் என்ற சொல்லைப் பிரித்தால் ________ ஆகப் பிரியும்.
10. வெறுமை + இலை ____________ ஆக புணரும்.

**பொருள் வகை**

11. பொருள் என்பது ________
12. பொருளிலக்கணம் ________, ________ என இரு வகைப்படும்.
13. அன்புடைய தலைவன் தலைவி பற்றிய ஒழுக்கத்தினைக் கூறுவது ______ எனப்படும்.
14. அகத்திணை ________ வகைப்படும்
15. அன்பின் ஐந்திணைகள் ________
16. அகவொழுக்கம் நிகழ்வதற்குக் காரணமான ________, ________ முதற்பொருள் எனப்படும்.
17. பொழுது ________, ________ என இருவகைப்படும்
18. ஐவகை நிலங்கள் ________
19. ஓராண்டின் ஆறு கூறுகள் ________
20. ஒரு நாளின் ஆறு கூறுகள் ________
21. ஐவகைத் திணைகள் ________
22. ஐவகை நிலத்திற்குரிய தெய்வம், மக்கள், உணவு, விலங்கு முதலிய பொருள்கள் ________ ஆகும்.
23. வாழ்க்கைக்குத் துணைபுரியும் கல்வி, செல்வம், புகழ், வீரம், அரசியல் முதலிய பொருள்களைப் பற்றிக் கூறுவது ________ ஆகும்.
24. அகப்பொருள் ________ இயல் ஆகும்
25. புறப்பொருள் ________ இயல் ஆகும்
26. புறம் பற்றிய நெறிகளைக் கூறுவது ________
27. புறத்திணையின் வகைகள் ________
28. பகை நாட்டின் மீது போர் தொடங்கு முன், அந்நாட்டிலுள்ள ஆநிரைகளுக்குத் தீங்கு நேரக்கூடாது எனக் கருதும் மன்னர், தன் வீரர்களை அனுப்பி அவற்றைக் கவர்ந்து வெட்சிப்பூவைச் சூடிச் செல்வது ________
29. வெட்சி வீரர்களால் கவர்ந்து செல்லப்பட்ட தம் ஆநிரைகளக் கரைந்தைப்பூவைச் சூடிச் சென்று மீட்பது ______
30. மண்ணாசை காரணமாக பகைவர் நாட்டைக் கைப்பற்றக் கருதி வஞ்சிப்பூவைச் சூடிப் போருக்குச் செல்வது ________
31. தன் நாட்டை கைப்பற்ற வந்த மாற்றரசனோடு காஞ்சிப்பூவைச் சூடி எதிர்த்துப் போரிடுவது ________
32. பகையரசனால் முற்றுகையிடப்பட்ட தம் மதிலைக் காத்தல் வேண்டி, உள்ளிருந்தே, வெளியே இருக்கும் பகையரசனோடு நொச்சிப்பூவைச் சூடிப் போரிட்டு, அம்மதிலைக் காப்பது ________
33. உழிஞைப் பூவைச் சூடிய தன் வீரர்களுடன் மாற்றரசன் கோட்டைக்குள் புகுந்து மதிலைக் கைப்பற்றுதல் ________
34. பகைவேந்தர் இருவரும் வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு தும்பைப் பூவைச் சூடி, தம் வீரர்களுடன் போரிடுவது ________
35. வெற்றிபெற்ற மன்னன் வாகைப் பூவைச் சூடி மகிழ்வது ________
36. பாடுவதற்குத் தகுதியுடைய ஓர் ஆண்மகனின் கல்வி, வீரம் செல்வம், புகழ், கருணை முதலியவற்றைப் போற்றிப்பாடுவது ________
37. வெட்சி முதல் பாடாண் வரை உள்ள புறத்திணைகளின் பொதுவான வற்றையும், அவற்றுள் கூறப்படாதவற்றையும் கூறுவது ______
38. கைக்கிளையின் இருவகைகள் ________
39. பெருந்திணை என்பது ________
40. நிரை கவர்தல் என்பது ________

**அணி**

41. அணி என்ற சொல்லுக்கு __________ என்பது பொருள்
42. இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞர் தம் குறிப்பினை ஏற்றிக் கூறுவது ________
43. புகழ்வது போலப் பழிப்பதும், பழிப்பது போலப் புகழ்வதும் _______ ஆகும்.
44. ஒரு சொல் இரு பொருள்பட அமைந்து வருதல் ______ ஆகும்.
45. இரட்டுற மொழிதல் அணியின் மற்றொரு பெயர் ______
46. இரட்டுற மொழிதல் அணியின் இருவகைகள் _________,__________
47. ஒரு செய்யுளில் ஒரு சொல் பிரிவுபடாமல் நின்று, ஒன்றுக்கு மேற்பட்ட பொருளைத் தருவது _____ எனப்படும்.
48. ஒரு செய்யுளில் ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளையும், அதுவே பிரிந்து நின்று வேறொரு பொருளையும் தருவது ________ ஆகும்.
49. ஒரு செய்யுளில், முன்னர் வந்த சொல், பொருள் அல்லது சொல்லும் பொருளும் மீண்டும் மீண்டும் வந்து அழகு சேர்ப்பது _______ ஆகும்.
50. பின் வரு நிலையணியின் வகைகள் _______,________,_________
51. செய்யுளில் முன்னர் வந்த சொல், மீண்டும் மீண்டும் வந்து வெவ்வேறு பொருளைத் தருவது ___________
52. செய்யுளில் ஒரே பொருள் தரும் பல சொற்கள் வருவது ___________
53. செய்யுளில் முன்னர் வந்த சொல், மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளைத் தருவது ___________
54. உவமையைக் கூறிப் பொருளைப் பெற வைப்பது _________
55. ஒரு பாடலைச் சொல்லாலும் பொருளாலும் அழகுபெறச் செய்தல் ________ எனப்படும்.

**III. சரியானவற்றைத் தேர்ந்தெடுக்கவும்.**

**பா வகைகள் - வெண்பா, ஆசிரியப்பா**

1. ஆசிரியப்பா _____ பெற்று வரும்
   ( செப்பலோசை, அகவலோசை, துள்ளலோசை, தூக்கலோசை)

2. வெண்பா _____ பெற்று வரும்
   (அகவலோசை, தூக்கலோசை, அகவலோசை, செப்பலோசை)

3. வெண்பாவின் பொது இலக்கணத்தோடு இரண்டு அடிகளைக் கொண்டதாக ஒரு விகற்பத்தானும், இரு விகற்பத்தானும் வருவது ______
   (நேரிசை வெண்பா, சிந்தியல் வெண்பா, பஃறொடை வெண்பா, குறள் வெண்பா)

4. வெண்பாவில் ________வரும்
   (வேற்றுச்சீர், வெண்சீர், இயற்சீர், இயற்சீர் மற்றும் வெண்சீர்)

5. பா வகைகள் ________ வகைப்படும்
   (இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து)

6. வெண்பாவின் பொது இலக்கணத்தில் ஈற்றடி________ பெற்று வரும்
(இரு சீர், முச்சீர், நாற்சீர், ஐந்து சீர்)

7. ஆசிரியப்பா ________ பெற்று வரும்
(ஒரு சீர், இரு சீர், முச்சீர், நாற்சீர்)

8. நான்கு அடிகளும் ஒரு விகற்பமாயும், இரு விகற்பமாயும் வரும் வெண்பா_______
(குறள் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, பஃற்றொடை வெண்பா)

9. இரண்டாம் அடியில் தனிச்சொல் பெற்று மூன்று விகற்பமாய் வரும் வெண்பா_______
(நேரிசை வெண்பா, நேரிசை சிந்தியல் வெண்பா, இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா)

10. பஃறொடை வெண்பா __________ பெற்று வரும்
(1 விகற்பம், 2விகற்பம், 3விகற்பம், பல விகற்பம்)

11. இரண்டாம் அடியின் இறுதியில் தனிச்சொல் பெற்று, 3 அடிகளை உடையதாய், 1 விகற்பமாகவோ, 2 விகற்பமாகவோ வருவது _________
(பஃறொடை வெண்பா, குறள் வெண்பா, இன்னிசை சிந்தியல் வெண்பா, நேரிசை சிந்தியல் வெண்பா)

12. மூன்று அடிகளைக் கொண்டதாய் தனிச்சொல் இன்றி, ஒன்று (அ) பல விகற்பத்தான் பெற்று வரும் வெண்பா __________
(குறள், சிந்தியல், இன்னிசை சிந்தியல், நேரிசை)

13. அறிந்தானை ஏத்தி அறிவாங் கறிந்து
சிறந்தார்க்குச் செவ்வ னுரைப்ப - சிறந்தார்
சிறந்தாமை ஆராய்ந்து கொண்டு - இது_________ வெண்பா
(நேரிசை, பஃறொடை, குறள், நேரிசை சிந்தியல் வெண்பா)

14. ஈற்றயலடி முச்சீராயும், ஏனைய அடிகள் நாற்சீராயும் அமைய 'ஏ' என்னும் ஓசையால் முடிவது ________ ஆசிரியப்பா
(நேரிசை, இணைக்குறள், நிலைமண்டில, அடிமறிமண்டில)

15. முதல் அடியும், கடைசி அடியும் நான்கு சீர்களாகவும், இடையில் உள்ள அடிகள் 2 (அ) 3 சீர்களாகவும் வருவது_______
(நேரிசை ஆசிரியப்பா, இணைக்குறள் ஆசிரியப்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா)

16. அனைத்து சீர்களும் 4 அடிகளாய் வந்து ஏ என்ற ஓசையுடன் முடிவடையும் பா________
(நேரிசை வெண்பா, நேரிசை ஆசிரியப்பா, நிலைமண்டில ஆசிரியப்பா, அடிமறிமண்டில ஆசிரியப்பா)

17. எந்த அடியை எங்கு அமைத்தாலும் பொருளும் ஓசையும் மாறாமல் வரும்_________
(அடிமறிமண்டில ஆசிரியப்பா, இணைக்குறள் ஆசிரியப்பா, நேரிசை ஆசிரியப்பா, நிலைமண்டில ஆசிரியப்பா)

18. ஆசிரியப்பாவின் வேறு பெயர் ___________
(குறட்பா, அகவற்பா, வஞ்சிப்பா, ஆசிரியப்பா)

19. ஈற்றடி முச்சீராயும் ஏனைய அடிகள் நாற்சீராயும் வரும் __________
(கலிப்பா, ஆசிரியப்பா, வஞ்சிப்பா,வெண்பா)

20. ஐந்தடி முதல் பண்ணிரண்டு அடிவரை பாடப்படும் வெண்பா ________ வெண்பா ஆகும்.
(இன்னிசை, நேரிசை, பஃறொடை, குறள்)

**IV. கூறியவாறு செய்க.**

1. வாழை + பழம் (சேர்த்து எழுதுக)
2. பொற்குடம் (புணர்ச்சி வகை கூறுக)
3. பெரியன் (பிரித்து எழுதி புணர்ச்சி விதி கூறுக)
4. செம்மை + ஆம்பல் ( சேர்த்து எழுதி புணர்ச்சி விதி கூறுக)
5. நிலம் + கடந்தான் (பிரித்து எழுதுக)
6. குறிஞ்சி (சிறு பொழுது கூறுக)
7. மருதம் (பெரும்பொழுது கூறுக)
8. மார்கழி, தை (காலம் எழுதுக)
9. நண்பகல் (நேரம் கூறுக)
10. எற்பாடு (பொருள் கூறுக)
11. உழிஞைத் திணை ( பூ எழுதுக)
12. பொருளென்னும் பொய்யாவிளக்கம் இருளருக்கும்
எண்ணிய தேயத்துச் சென்று (பா வகை கூறுக)
13. செல்வரை (அசை எழுது)
14. எள்ளுவர் (வாய்பாடு கூறு)
15. கடனறிந்து (அசை பிரித்து வாய்பாடு கூறு)
16. தேவர் அனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான் (அணி எழுதுக)
17. பீலி பெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின் (அணியைக் கூறுக)
18. சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லில் பயனிலாச் சொல் (அணியைச் சுட்டி விளக்குக)
19. தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும் - (அணி எழுதுக)
20. எடுத்துக்காட்டு உவமையணி - (இவ்வணி அமைந்த செய்யுள் எழுது)

**V.கடிதம்**

1. பேருந்து வசதி வேண்டிப் போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநருக்குக் கூட்டு விண்ணப்பம் எழுதுக.
2. குடிநீர் வசதி வேண்டி ஊராட்சி ஒன்றிய ஆணையருக்குக் கூட்டு விண்ணப்பம் எழுதுக.
3. நீ கண்டு களித்த இடம் குறித்து, உன் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.
4. பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வில் முதல் மதிப்பெண் பெற்ற உன் நண்பனைப் பாராட்டிக் கடிதம் எழுதுக.
5. வெள்ளத்தில் மூழ்கிய சிறுவனைக் காப்பாற்றியமைக்காக அண்ணா விருது பெற்ற உன் நண்பனைப் பாராட்டிக் கடிதம் எழுதுக.
6. உன் ஊரில் நூலக வசதி வேண்டி பொது நூலகத்துறை இயக்குநருக்குக் கூட்டு விண்ணப்பம் வரைக.
7. தொலைத்துவிட்ட பொருளைக் கண்டுபிடித்துத் தரக் கோரிக் காவல் துறை ஆய்வாளருக்கு முறையீட்டுக் கடிதம் எழுதுக.

**VI. கட்டுரை**

1. 'ஆழிப்பேரலை' குறித்து கட்டுரை எழுதுக.
2. 'காலத்தை வெல்லும் கணினி' பற்றி ஒரு கட்டுரை வரைக.
3. நான் விரும்பும் நூல் என்ற தலைப்பில் உனக்குப் பிடித்த நூல் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.
4. 'சுற்றுச்சூழல் பாதுகாப்பு' பற்றி ஒரு கட்டுரை வரைக.
5. மழை நீர் சேகரிப்பு குறித்து ஒரு கட்டுரை வரைக.
6. 'நான் விரும்பும் கவிஞர்' என்ற தலைப்பில் பாரதியார் பற்றி ஒரு கட்டுரை வரைக.
7. 'அனைவருக்கும் கல்வி' குறித்து ஒரு கட்டுரை எழுதுக.

**VII. அறிக்கை**

1. கண்தான முகாம் பற்றிய அறிக்கை ஒன்று எழுதுக.
2. உன் ஊரில் நடைபெற்ற இரத்த தான முகாம் குறித்து ஒரு அறிக்கை எழுதுக.
3. உன் பள்ளியில் நடைபெற்ற 'செஞ்சிலுவைச் சங்கமுகாம்' பற்றி ஒரு கட்டுரை எழுதுக.
4. உன் ஊரில் நடைபெற்ற அறிவியல் மற்றும் கலைப்பொருள் கண்காட்சி குறித்து ஒரு அறிக்கை எழுதுக.
5. உன் பள்ளியில் நடைபெற்ற முத்தமிழ் மன்ற விழா குறித்து ஒரு அறிக்கை எழுதுக.
6. உமது பள்ளியில் நடைபெற்ற சிறு சேமிப்பு முகாம் பற்றி அறிக்கை ஒன்று எழுதுக.
7. உமது பகுதியில் நடைபெற்ற 'சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு முகாம்' குறித்து அறிக்கை ஒன்று எழுதுக.

***********